[1979 மார்ச் 24

மன்னார்குடியில் பூச்சிமருந்து தொழிற்சாலை.

*522. வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி அருகில் உள்ள பாமணியில் பூச்சிமருந்து தொழிற்சாலை அமைக்க மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டதா ?

(ஆ) இல்லையெனில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :(அ) & (ஆ) : அரசு, பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவுவதற்கு புதிதாக உரிமம் வழங்குவதில்லையாதலால், பாமணி உரமணி ஆலையுடன் இணைந்த முறையில் பூச்சி மருந்துத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

[முற்பகல் 9-30]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்த அரசாங்கமே பூச்சி மருந்து தொழிற்சாலையை அங்கே அமைக்கவேண்டுமென்ற முறையிலே திட்ட முன்வரைவை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அப்படி அனுப்பி, அதை அமைக்க வேண்டுமென்ற முறையிலே அதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை நிலையத்தின் சார்பாக வலியுறுத்தப்பட்டும், இப்போது உங்கள் ஆட்சியில் கைவிடப்பட்டதாக சொல்கிறீர்களே, உங்களுக்கு கைவிடுவதற்குத்தான் தெரியுமா ? அங்கே அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு.கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதா அல்லது மறுதளிப்பதா என்று தீர்மானிக்கிற உரிமை மத்திய அரசிடம் இருக்கிற காரணத்தாலும் இந்தக் கேள்வியினுடைய மையமாக இருக்கிற கருத்து. பூச்சி மருந்து தொழிற்சாலை அமைப்பதற்கு சாத்தியமாக இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கிற உரிமை மத்திய அரசுக்கு இருக்கிற காரணத்தினாலும் அவர்கள் அதை மறுதளித்திருக்கிறார்கள் என்ற விவரத்தை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

REPORTING SECTION

திரு. துரை கோவிந்தராசன் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாமணி ஆலையில் பூச்சி மருந்து தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : மத்திய அரசு கைவிட்டுவிட்டதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி பெருகி காவிரித் தண்ணீர் பாய்கிற நேரத்திலே பூச்சி இன விருத்தி செய்யப்படும் கூடாரமாக இருக்கிற காரணத்தால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களை பூச்சியாலும் கெட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் வேறு முறையிலாவது பூச்சி மருந்து தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி கேட்டிருக்கிற கேள்விக்கும் கொஞ்சம் கூட தொடர்பு இல்லை. எனவே அவர்கள் ஏதாவது புதிய முயற்சிகள் தேவைப்படுமானால் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் என்றால் தமிழகத்திற்கே உணவு அளிக்கக் கூடிய மாவட்டம். தஞ்சை மாவட்டத்திலே $15\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலங்களில் உற்பத்தி செய்யக்கூடிய அதிகமான விவசாயிகள் இருக்கக்கூடிய நிலைமை இருப்பதால் பூச்சி கொல்லி மருந்து தொழிற்சாலையை அமைப்பதற்குப் போன அரசாங்கம் அனுமதி கொடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையிலேயும் பூச்சியால் அவர்கள் நசுங்காமல் அவர்களைப் பாதுகாக்கக் கூடிய முறையிலேயும் இப்போது நடைபெறுகிற கூட்டத் தொடரிலேயே அந்தத் தொழிற்சாலை அங்கே வேண்டுமென்று அவசியமாக ஒரு தீர்மானம் போட்டு மத்திய அர்சை வலியுறுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு விரைந்து நல்ல முடிவு எடுக்க துரிதமாக தன்னுடைய கடமையை அரசு செய்யும்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, பாமணியில் அந்தத் தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்று எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்ற முறையிலே அது அனுப்பப்பட்டது. அதற்கான பீஸிபிலிட்டி ரிப்போர்ட் எல்லாம் வந்தது. இப்போது இந்த அரசு அதை வலியுறுத்தத் தவறியதன் காரணமாகத்தான் மத்திய அரசு அதை ரொட்டீனாக மறுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசிடம் வலியுறுத்தாதது இந்த அரசின் தவறுதான். இவர்களுடைய தவறின் காரணமாக அது மறுக்கப்பட்டிருக்கிறது. சில விஷயங்களை வலியுறுத்துகிறீர்கள். சில விஷயங்களை வலியுறுத்துவதில்லை. ஆகவே இப்போதாவது அதை வலியுறுத்துவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; துணைத் தலைவர் அவர்களே, நான் திரு. சுப்பு சொன்னதிலிருந்து சற்று மாறுபடுகிறேன். இந்த அரசு வலியுறுத்தவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசு மட்டுமல்ல, இந்த அரசோடு கூட்டுறவுத் துறையுடன் தொடர்பு கொண்டிருக்கிற தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட நமக்காக மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தியது. அதற்குப் பிறகும் மத்திய அரசு உரிமம் கொடுப்பதை மறுதளித்திருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு என்ன காரணத்தினால் அதை மறுதளித்தார்கள் ? நம்முடைய அரசு அதற்கான திட்ட முன் வடிவை—எத்தனை இலட்சம் ரூபாயில் அந்தத் தொழிற்சாலையைத் துவங்குவது என்ற விவரங்களை அங்கே அனுப்பினார்கள் ? ஏன் அவர்கள் மறுத்தார்கள் ? மீண்டும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் முறையில் நாம் நடவடிக்கை எடுக்க அரசிடம் என்ன யோசனை உள்ளது என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடுமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுப் பயிற்சிக்கான மையம்.

*523 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கூட்டுறவு பயிற்சிக்காக 'கூட்டுறவு மையம்' ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா ?